
27589

அரிவையர் புலம்பும்

# அமிர்த ஒப்பாரி



Dr. U. V. S. IYER LIBRARY MADRAS-90

A. பாபு அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

உ

கடவுள் துணை.

புவி எங்கும் புகழ்பெற்ற சோகரஸ திலகம்

திருசிரபுரம் - ஸ்ரீமான். R. T. சுடலைமுத்து தாஸ்

அவர்கள் இயற்றிய

# அரிவையர் புலம்பும்

# அமிர்த ஒப்பாரி

விருத்தம்

அரிவையர்கள் புலம்பும் அமிர்த ஒப்பாரி
பரிமளித்து ஓங்கவென்று
சிறியவன் தெண்டனிட்டேன்
கரிமுகனின் கழலே காப்பு.

## தந்தையாருக்குப் புலம்பல்.

பச்சை கடுதாசி என்னைபெற்ற அப்பா
உனக்கு பட்டணத்து மைக்கூடு
நீங்கள் பரமலோகம் போரேனென்று
நீபெற்ற பாவிக்கு பாங்குடனே எழுதிவிட்டால்
உங்ககடுதாசி கண்டவுடன்
என்னைகொண்ட பாண்டியரும்
நான் பாங்குடனே வந்து
பவளத்தேர் செய்து
அந்த பவளத்தேர்க்குள்ளே நீபெற்ற
பாவி நான்பதரி அழுதுவிட்டால்

நீங்கள்போகும் பரமலோகம் மோட்சந்தான்
சிகப்புகடுதாசி என்னைபெற்ற அப்பா
உனக்கு சீரங்கத்து மைக்கூடு
நீங்கள் சிவலோகம் போரேனென்று
நான்வாழும் சீமைக்கு
சீக்கிரம் எழுதிவிட்டால்
உங்ககடுதாசி கண்டவுடன்
சீரகச்சேம்பா வாக்கரிசி
சீக்கிரமாய் நானெடுத்து
தென்னைமரமேரி இனுசுக்கொரு காயிறக்கி
மாங்காமரமேரி மனசுக்கொரு காயிறக்கி
செந்தாமரப்பூதேர்கட்டி சீக்கிரமாய் வந்தாலும்
உன்னுடையதிரேகம் பார்க்கக்கிட்டலியே
நீங்கள் போகும் தெய்வலோகம் சம்மதமோ.

மதுரைக்கு நேர்கிழக்கே மாரியம்மன் கோவிலுக்கு
என்னைப்பெற்ற அப்பா
உங்கள் கண்ணுள்ள நாளையிலே
நீங்கள் ஒரு மணிவிளக்கு போட்டீர்களே
அந்த மணிவிளக்கு போட்டதோஷம்
உங்கள் கண்ணு மறைந்தவுடன்
நீங்கள் பெற்றமகள் மேலேசாய்ந்ததையா

## தாயாருக்குப் புலம்பல்.

சிகப்புரயிலுவண்டி என்னைபெற்ற தாயே
நான்பிறந்த சேலத்திற்கு போகும்வண்டி
சிகப்புரயிலேரி சேலத்திற்குபோயிரங்கி
நீர்பெற்ற செல்வகிளி வாய்திறந்து
சேலேவேணுமென்று சொன்னால்

எனக்கு சேலையெடுத்திடுவாய்
சிறுநகையும் செய்திடுவாய்
சீறுவகைகளையும் சிறப்பாக செய்திடுவாய்
நான்சீலையும் மடிச்சுடுத்தி
சிறுநகையும் மேல்பூட்டி
சீறுகளை முன்னடத்தி சேலத்து
வீதிசிறப்பாக வந்தாலும்
சேலத்திலே பெய்யுமழை எனக்கு
சேலைநனையாது சிறுநகையும் மங்காது
சீறுகளும் நனையாது உங்கள் கண்ணும்
மறைந்தவுடனே சேலைநனைந்திடுச்சே
சிறுநகையும் மங்கிடுச்சே சீறுகளும் நனைந்திடுச்சே
என்னைபெற்றதாயே நீங்கள்போகும்
சிவலோகம் சம்மதமோ.

பச்சைரயிலுவண்டி என்னைபெற்றதாயே
நான்பிறந்தசீமை பட்டணம்போகும்வண்டி
பச்சைரயிலேரி பட்டணம் போயிறங்கி
நீபெற்ற பச்சை கிளியால் வாய்திறந்து
பாவி நான்பட்டுவேணும் என்றுசொன்னால்
நீபட்டுஎடுத்திடுவாய் பவுன்நகையும்செய்திடுவாய்
நான்பட்டு மடிச்சுடுத்தி பவுன்நகையும்மேல்பூட்டி
பட்டணம்வீதியும் பலவீதி நான்வந்தால்
அந்தபட்டணத்தில் பெய்யுமழை
எனக்குபட்டுநனையாது பவுன்நகையும் மங்காது
உங்கள்கண்ணும் மறைந்தவுடனே
எனக்கு பட்டுநனைந்திடுச்சி பவுன்நகையும் மங்கிடுச்சே
என்னைபெற்றதாயே நீங்கள்
போகும் பரமலோகம் சம்மதமோ.

பொட்டிரயிலுவண்டி என்னைப் பெற்றதாயே
நான்பிறந்தசீமை புதுக்கோட்டை போகும்வண்டி
பொட்டிரயிலேறி புதுக்கோட்டை போயிறங்கி
நீபெற்ற பொன்னுங்கிளி வாய்திறந்து
புடவைவேண்டு மென்றுசொன்னால் [டுவாய்
நீபுடவை எடுத்திடுவாய் பொன்னுபரணம் செய்தி

நான் புடவைமடிச்சுடுத்தி பொன்னுபரணம்மேல்
அந்த புதுக்கோட்டை வீதியிலே [பூட்டி
நான்பொன்னுவழி நடந்தால்
அந்த புதுக்கோட்டையில் பெய்யுமழை
எனக்குபுடவை நனையாது
பொன்னுபரணம் மங்காது
உங்கள்கண்ணும் மறைந்தவுடனே
புடவை நனைந்திடுச்சே
பொன்னுபரணம் மங்கிடுச்சே
என்னைப்பெற்றதாயே நீங்கள்
போகிறபொன்னுலகம் சம்மதமோ.

## பிள்ளை வரம்

கும்பகோணத்திலே மாமாங்ககுளத்திலே
என்னைக்கொண்ட கோமானும்நானும்
குளித்துத்தலைமுழுகி கும்பேஸ்வர கோவிலிலே
நாங்கள் இருபேரும்
ஒருகுழந்தைவரம் கேழ்க்கையிலே
அந்தகும்பேசுர ஈஸ்வரரும்
இந்தகோதை முகம்பார்த்து
ஒருகுழந்தையை கைகொடுத்தார்
அந்தகுழந்தையுட தோஷமல்லோ

என்னைக்கொண்ட கோமானைக்
கொள்ளையிட்டேன்.

திருச்சிக்கு நேர்வடக்கே
திருவானைக் காவலின்
ஜெம்புலிங்க நாதரிடம்
என்னைக்கொண்ட ஸீமானும் நானும்
ஒருசெல்வன் வரம்கேழ்க்கையிலே
அந்த ஜெம்புலிங்கநாதரும்
இந்ததேவி முகம்பார்த்து
ஒருசெல்வனைக் கைகொடுத்தார்
அந்தசெல்வனுட தோஷமல்லோ
என்னைக்கொண்ட ஸீமானைக்கொள்ளையிட்டேன்.

## புருஷனுக்குப் புலம்பல்.

சிகப்பிழைத்த மோட்டாராம்
என்னைக்கொண்ட ஸீமானும்
ஏறுமோட்டார் நீங்கள்
சிகப்பிழைத்த மோட்டாரேறி
ஸீரங்கம் போயிரங்கி
அந்தஸீரங்கத்து தாசியோடே
நீங்கள் சீட்டுவிளையாடையிலே
அந்தஸீரங்கத்து தாசியை
ஒருசெந்தேளு கொட்டாதா
அவள்சிவலோகம் சேராளோ
என்பாவி வாசலுக்கு
நீங்கள் சீக்கிரமாய் வாரதெப்போ.

கல்லிழைத்த மோட்டாரேறி
என்னைக்கொண்ட கருணைராஜா

ஏறும் மோட்டார்
நீங்கள் கல்லிழைத்த மோட்டாரேறி
காரைக்குடி போயிரங்கி
அந்தகாரைக்குடி தாசியோடே
நீங்கள்கலந்து விளையாடையிலே
அந்தகாரைக்குடி தாசியை
ஒருகருநாகம் தீண்டாதோ
அவள்கைலாசம் சேராளோ
என்னைக்கொண்ட மன்னவரே
என்பாவி வாசலுக்கு
நீங்கள் காலமே வாரதெப்போ.

பவுன் இழைத்த மோட்டாராம்
என்னைக்கொண்ட பாண்டியர்
ஏறும் மோட்டார்
நீங்கள்பவுன் இழைத்த மோட்டாரேறி
பழனிமலே போயிரங்கி
அந்தபழனிமலே தாசியோடே
படுத்துரங்கும் வேளையிலே
அந்தபழனிமலே தாசியை
ஒருபாம்பிருந்து தீண்டாதா
அவள் பரமலோகம் சேராளா
என்னைக்கொண்ட பாண்டியரே
என்பாவி வாசலுக்கு
நீங்கள் படுத்துரங்க வாரதெப்போ

## சகோதரனுக்குப் புலம்பல்.

பூங்காவனச் சோலைகளும்
பொற்றாமறைக் குளம்

என்கூட பிறந்ததம்பி
நான்வாழும்வாசலிலே
போலீசு காவல்களும்
அந்த பொற்ருமரைக்குளத்தில்
பொண்ணுத் தலைமுழுகி
போலீசைமுன் அனுப்பி
பொண்ணு வழி நடந்து
நீவாழும்சீமை புதுக்கோட்டை.
வாரேனென்று பொழுதோடே
தந்திசொல்லி விட்டால்
தந்தியைக் கண்டவுடன்
நான் காதவழி தூரம்
எக்காலம் ஊதிவர
எட்டௌநீர் கண்திறந்து
என்கூடபிறந்த தம்பி
என்னைக்காப்பாற்ற வாரதெப்போ.

செண்பக சோலைகளும்
செந்தாமரைக் குளமும்
என்கூடபிறந்த தம்பி
நான்வாழும் வாசலிலே
சிப்பாய்கள் காவல்களும்
அந்தசெந்தாமரைக் குளத்தில்
செல்லித் தலை முழுகி
சிப்பாய்களை முன் அனுப்பி
செல்லி வழிநடந்து
நீவவாழும்சீமை சேலத்திற்கு
வாரேனென்று சீக்கிரமாய்
தந்தி சொன்னுள்

தங்கையை கண்டவுடன்
குதிரையின்மேல் மேளம்வைத்து
கோலாகாலா வேளமடிக்க
பட்டத்துயானையின்மேல் மேளம்வைத்து
பரப்பரப்பாய் அடித்துவர
பந்துஇளநீர் கண்திறந்து
என்கூடபிறந்த தம்பி எனக்கு
நீபசியாற்ற வாரதெப்போ

அமிர்த ஒப்பாரி முற்றிற்று

---

V. Press, Madras.

**சரீர மர்ம சாஸ்திரம்** விலை ரூ. 1

[ஓர் மானிட மர்ம இன்ப நூல் அநேக படங்களுடன்]

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும், அவர்களது மர்ம ஸ்தானங்களின் அமைப்பும், அவைகளின் நேர்மையான உபயோகங்களும், மன்மத சிங்கார ரகஸ்யங்களும், சம்சார சுகம், குடும்ப ரகசியம், மணவாழ்க்கையின் மர்மங்கள், காதலர் காதலி சரச சல்லாப இன்பங்கள், ஆரோக்கிய சாஸ்திரம், மருத்துவ சாஸ்திரம், சிசு சம்ரக்ஷண சாஸ்திரம் முதலியவும் ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் வியாதிகளும், அதைப் போக்கத்தக்க சிகிச்சைகளும், மகா ரிஷிகள் மர்மமாக ஆதியில் எழுதிய இல்லற இன்பங்கள் முதலியன அடங்கியுள்ளன.

**மாயாமேயோ** அல்லது

**மேயோவுக்குச் சவுக்கடி** (வ. ரா. எழுதியது) ரூ. 2

[பாரிஷ்டர். ஜார்ஜ் ஜோஸப் எழுதிய அரிய முகவுரையுடன் கூடியது. 416 - பக்கங்கள்:

உங்களிடத்தில் தன் மதிப்பு இருக்கிறதா? நம்மைப் பிறர் இகழ நாம் பார்த்துக் கொண்டிருக்கிறதா? அதிலும் அசுத்தக்காரி வெள்ளைக்காரி மேயோவாம் ஒருத்தி, அவள் சொல்ல நாமும் கேட்கவா? தமிழ் மக்களே! எழுங்கள்! நம்மையும் நம் நாட்டையும் பற்றிய குணதிசயங்களை உலக மறியச்செய்வது நமது கடமையாகும். இந்த மாயாமேயோ புஸ்தகத்தில் மேயோவுக்கும் பரங்கிகளுக்கும் மற்றுமுள்ள வெள்ளையர்களுக்கும் சரியான சவுக்கடிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நல்ல தெள்ளிய தமிழில் வினோதமான நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

தமிழ் புத்தகங்கள் முற்றுமடங்கிய விலை விவர ஜாபிதா வேண்டுபவர்களுக்கு இலவசமாக அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:—

ஆர். ஜி. பதி அண்டு கம்பெனி,
நெ. 4, வெங்கடராமய்யர் தெரு, ஜி. டி., சென்னை.